**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.90/2019**

13.11.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 செல்வம் த/பெ.லட்சுமி நாராயணன்: 2 மற்றும் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

பாகப்பத்திரத்தில் கண்ட சி ஷெட்யூல் சொத்து 1/8 பாகத்திற்காக சரஸ்வதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். டி ஷெட்யூல் சொத்து கொண்டம்மாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஈ ஷெட்யூல் சொத்து ஏ, பி மற்றும் சி ஷெட்யூல் பாகஸ்தர்களுக்கு பொதுவாக வைக்கப்பட்டது என்றால் சரிதான். லட்சுமி பாய் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் தலா 1/8 பாகம் அவர்கள் ஆயுளுக்கு பிறகு உதயகுமாருக்கு சேரவேண்டும் என்று பாகப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பத்திரம் ஏற்பட்ட காலத்தில் உதயகுமாரர் மைனராக இருந்ததால் பி ஷெட்யூல் சொத்தினை லட்சுமிபாய் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். ஈ ஷெட்யூல் பொதுசொத்தினை லட்சுமிபாய் மற்றும் ராமசாமி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 1966ல் உதயகுமார் மேஜரான பிறகு பி ஷெட்யூல் சொத்துக்களை அவர் ஒப்புக்கொண்டு அனுபவித்து வந்தார் என்றால் உதயகுமார் 1970ம் ஆண்டு தான் மேஜரானார், அதன்பிறகு அவர் அந்த சொத்தினை அனுபவித்து வந்தார்.

வழக்கு பி அட்டவணை சொத்துக்களான 22, 25, 26, 27, 34 முதல் 38 சொத்துக்களையும் (அது பாகப்பத்திரத்தில் சி ஷெட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் வழக்கு டி அட்டவணை சொத்துக்களையும் (அது பாகப்பத்திரத்தில் ஈ ஷெட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ளது) சரஸ்வதி அம்மாள் 19.05.1979ல் உதயகுமாருக்கு விடுதலை பத்திரம் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் அது

எனக்கு தெரியாது. அந்த விடுதலை பத்திரம் அடிப்படையில் உதயகுமார் அந்த சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் அவர் சொத்துக்களை அனுபவித்து வந்தார், ஆனால் விடுதலை பத்திரம் பற்றி எனக்கு தெரியாது.

சரஸ்வதி அம்மாள் 20.05.1979ல் வழக்கு பி அட்டவணை சொத்துக்களான 1 முதல் 21, 23,24 மற்றும் 28 முதல் 33 (அது பாகப்பிரிவினை பத்திரத்தில் சி ஷெட்யூல்) மற்றும் இதர சொத்துக்களையும் உதயகுமாரின் மனைவியும் 2ம் பிரதிவாதியுமான வசந்தா அம்மாள் என்பவருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி வசந்தா அம்மாள் அந்த சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது.

பாகப்பிரிவினை பத்திரத்தில் ஈ அட்டவணையில் கண்ட பொதுசொத்துக்களை தாவா தாக்கல் செய்வதற்கு 40 ஆண்டுகள் முன்பு 1ம் பிரதிவாதியும் மற்றும் ராமசாமியும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்களை ராமசாமி மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட்டார் என்றால் ராமசாமி அவருடைய மனைவி சுசீலாவிற்கு கிரையம் கொடுத்துவிட்டார். 1950ம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பி, சி, ஈ மற்றும் எப் ஆகிய அட்டவணை சொத்துக்களில் வழக்கு தொடர்ந்த வாதி அனுராதாவிற்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

1966ம் வருடம் 1ம் வாதிக்கு 1ம் பிரதிவாதி உதயகுமார் தன் தயாருடன் சேர்ந்து திருமணம் செய்துவைத்தார் என்றால் தாயார் மட்டும் தான் திருமணம் செய்துவைத்தார். திருமணத்தின் போது 1ம் வாதிக்கு 50 சவரன் நகைகளும் மற்றும் சீதனப்பொருட்களும் அளித்து திருமணம் செய்து வைத்தார்கள்

என்றால் அது பாகப்பிரிவினையில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது எனக்கு நேரில் தெரியாது. 1ம் வாதி அனுராதா திருமணம் ஆனபிறகு தன் கணவருடன் ஆனைவாரி கிராமத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1ம் வாதியின் 4 குழந்தைகளுக்கும் பிரசவத்திற்கான செலவுகளை செய்ததும் குழந்தைகளுக்கு நகைகள் போட்டதும் 1ம் பிரதிவாதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி சகோதரர் என்ற முறையில் 1ம் வாதிக்கு தேவையான உதவிகளை அவ்வபோது செய்துவந்தார் என்றால் இல்லை. 1ம் வாதி அனுராதா எந்த காலத்திலும் சொத்துக்களை அனுபவித்தது இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு 3 முதல் 33 பிரதிவாதிகள் தேவையற்ற நபர்கள் என்றால் 5ம் பிரதிவாதி தவிற மற்ற நபர்கள் தேவையற்ற நபர்கள். தாவா சொத்துக்கள் வழக்கிற்காக சரியான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல, தேவையான நீதிமன்ற கட்டணம் செலுத்த நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதிகள் 5, 14, 19 மற்றும் 20 தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அவகாசம் கோரப்பட்டதால் அவர்கள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.